

L.Ganesh



Harish Lakshman

# ரானே குழுமத்தின் புதிய முயற்சிகள்

தமிழகத்தைச் சார்ந்த ரானே குழுமம் பல ஆட்டோமொபைல் காம்பொனன்ட் சாதனங்களைத் தயாரிக்கும் தொழிலகங்களை தன்னிடையே கொண்டதாகும். இக்குழுமம் $494 மில்லியன் வர்த்தகம் செய்கிறது. ரானே குழுமத்தைச் சார்ந்த டிஆர்டபிள்யூ ஆட்டோமோடிவ்வுடன் இணைந்து சமபங்களிப்புடன் தயாரிப்புகள் செய்துவருகின்றனர்.

இரண்டு வகை காரணங்களினால் டிஆர்டபிள்யூவின் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது. ஹைடிராலிக் பவர் ஸ்டீயரிங் பிஸினசானது முழுவதும் வர்த்தக வாகன விற்பனையையே நம்பியுள்ளது. இந்த விற்பனை களம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இரண்டாவதாக பயணிகள் கார்களில் ஹைடிராலிக் ஸ்டீரிங் உபயோகிப்பது குறைந்து எலெக்டிரிக் பவர் ஸ்டீரிங் பயன்படுத்துவது அதிகமடைந்துள்ளது என்று தெரிவிக்கிறார் ரானே குழுமத்தின் சேர்மன் எல்.கணேஷ். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக ரானே டிஆர்டபிள்யூவின் விற்பனை இறங்குமுகமாகியது. இதனின் வருவாய் ஒவ்வொரு ஆண்டாக குறைவு அடைந்து வருகின்றது.2013–14–ம் வருடத்தில் ரூ.590 கோடிகள், 2012–13–ம் வருடம் ரூ.631 கோடிகள் மற்றும் 2011–12–ம் வருடத்தில் ரூ.620 கோடிகளாக விற்பனை இருந்தன.

எனவே ரானே டிஆர்டபிள்யூ விற்பனையை அதிகரிக்க ஓர்புதிய பிஸினஸை குழுமம்

கண்டுள்ளது. குழுமத்தின் அமெரிக்க பாகஸ்தரான டிஆர்டபிள்யூவுடன் பேச்சு நடத்தி இந்நிறுவனம் தயாரிக்கும் பல புதிய தயாரிப்புகளை இந்தியாவில் களமிறக்க முயற்சிக்கின்றனர். இதற்கிடையே இக்கம்பெனியார் டிராக்டர்கள் மற்றும் மினி-டிரக்குகளுக்கான புதிய பவர் ஸ்டிரிங் சிஸ்டம் தயாரித்திட முயற்சித்து வருகின்றனர். இதனால் வர்த்தகம் மேன்மை பெற வாய்ப்புள்ளது என கருதுகின்றனர்.

மேலும் இக்கம்பெனியார் ஏற்றுமதியினை அதிகரிக்க கடுமையாக முயற்சித்து வருகின்றனர். இவர்கள் இரண்டு வருடம் முன்பாக ஓர் புதிய முயற்சியில் ஈடுபட்டு ஏர்பேக்குகள் தயாரிப்பு மேற்கொண்டனர். ஓர் ஆண்டில் 3.2லட்சம் ஏர்பேக்குகள் தயாரிக்க திறன் பெற்றிருந்தனர். இதனை ஆண்டிற்கு 8.1லட்சம் யூனிட்டாக உயர்த்த வாய்ப்புள்ளது. ஏர்பேக்கிற்கு நல்ல எதிர்காலம் உள்ளது.

நீண்டகாலஅடிப்படையுடன் மற்றும் லாப நோக்குடன் செயல்புரிகின்றனர். வாகன விற்பனை சந்தையில் ஏற்பட்டுள்ள டிமான்டினைப் பொறுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.